மொத்த விலையில் 4 சதவிகிதம் குறைவான விலைக்கு இங்கு காய்கறிகள் வாங்குபவர்களுக்குக் கொடுக்கப்படும். விடுதியின் முன்னால் இருக்கிற காய்கறித் தோட்டத்தின் வரவு செலவு பற்றிய விவரம் தற்சமயம் என் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு எதிர்ப்புறமுள்ள காய்கறித் தோட்டத்திற்குப் போடப்பட்டுள்ள முள்வேலி, கம்பம் இவற்றிற்கான செலவிற்காவது அது சம்பாதித்துக் கொடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி, 'காய்கறி விற்பனைச் சங்கம் ஒன்றை அமைக்க அரசு கருதியுள்ளதா ?' என்பதாகும். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு முன் உள்ள காய்கறித் தோட்டத்தைப் பற்றியதல்ல. ஆகவே அது குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அத்தனையும் சேகரித்துத் தரப்படும்.

அரிசி ஆலைகளுக்கான அனுமதிகளை எதிர்த்து ரிட் மனுக்கள்

***159 வினு—திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

1968-ம் ஆண்டில் அரிசி ஆலைகள் துவக்குவதற்கு கொடுத்த அனுமதியை எதிர்த்து எத்தனை ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முப்பது.

மதுரை பால்பண்ணைத் திட்டத் தொழிலாளர்கள்.

*** 160 வினு—திரு. என். சங்கரய்யா:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வார விடுமுறை, 8 மணி நேர வேலை, வருடாந்திர லீவு வசதிகள் கேட்டு, மதுரை பால்பண்ணைத் திட்டத் தொழிலாளர்களிடமிருந்து 1–9–1968-ம் தேதியிட்ட மனு ஒன்று பால்திட்ட ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் அம்மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இம்முறையீடு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. என். சங்கரய்யா : இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த மனு அவர்களால் கொடுக்கப்பட்டும் இந்த ஆரம்ப உரிமைகள், வார விடுமுறை, எட்டு மணி நேர வேலை போன்றவை பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு அந்த உரிமைகள் வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?